செ.வெ.எண்: 377 நாள்: 07-10-2021

# திருநெல்வேலி மாவட்டம்

## ஊரக உள்ளாட்சி தேர்தல் இரண்டாம்கட்ட வாக்குப்பதிவு 09.10.2021 அன்று 4 ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறவுள்ள வாக்குப்பதிவு மையங்களுக்கு கணினி மூலம் வாக்குப்பதிவு அலுவலர்களை தேர்வுசெய்யும் (Randomazition) முறை மாவட்ட தேர்தல் பார்வையாளர் திரு. ஜெ. ஜெயகாந்தன்., இ.ஆ.ப., அவர்கள தலைமையில் நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்டம், ஊரக உள்ளாட்சி சாதாரண தேர்தலை முன்னிட்டு, இரண்டாம்கட்ட தேர்தலில் வாக்குச் சாவடி மையங்களில் பணிபுரியவுள்ள பணியாளர்களுக்கான கணினி முறையில் (Randomization) பணிஒதுக்கீடு தேசிய தகவலியல் மையத்தின் ஆண்லைன் மென்பொருள் உதவியுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் பார்வையாளர் திரு. ஜெ. ஜெயகாந்தன்., இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (07.10.2021) நடைபெற்றது.

திருநெல்வேலி மாவட்டம், உள்ளாட்சி தேர்தல் முதற்கட்டம் 06.10.2021 அன்று முடிவுற்றது. இரண்டாம் கட்ட தேர்தல் 09.10.2021 அன்று நடைபெறவுள்ளது. இரண்டாம்கட்ட தேர்தலில், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் 06 பதவியிடங்களுக்கு 27 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர், ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் 60 பதவியிடங்களுக்கு 307 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர், கிராம ஊராட்சி தலைவர் 89 பதவியிடங்களுக்கு 1 தலைவர் பதவி இடம் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இடத்திற்கு 390 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் 801 பதவியிடங்களுக்கு 172 பதவிஇடம் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பதவி இடங்களுக்கு 1792 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இரண்டாம் கட்ட வாக்குப்பதிவு களக்காடு, நாங்குநேரி, இராதாபுரம், வள்ளியூர் ஆகிய 4 ஒன்றியங்களுக்கு 09.10.2021 அன்று இரண்டாம் கட்ட

தேர்தல் 567 வாக்குப்பதிவு மையங்களில் நடைபெறவுள்ளது. இதற்காக வாக்குப்பதிவு மையங்களில் 4511 வாக்குப்பதிவு பணியாளர்கள் பணிபுரியவுள்ளனர். வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரியவுள்ள பணியாளர்கள் எந்த வாக்குச்சாவடிகளில் பணிபுரியவேண்டும் என்பதற்பான கணினி முறையிலான பணி ஒதுக்கீடு நடைபெற்றது. பணிஒதுக்கீடு செய்யப்பட்ட பணி ஆணைகள் நாளை நடைபெறும் மூன்றாம் கட்ட பயிர்ச்சியின் போது வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி., அவர்கள், தேசிய தகவலியல் மைய அலுவலர் திரு. தேவராஜன், தொழிநுட்ப இயக்குநர் திரு. ஆறுமுகநயினார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (வளர்ச்சி) திருமதி. சசிகலா, (ஊரக உள்ளாட்சி தேர்தல்) திரு.ராம்லால் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருநெல்வேலி.**